[1978 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எல்லாப் பள்ளிகளையும் அரசே ஏற்று நடத்த வேண்டும் என்ற எண்ணம். மாண்புமிகு உறுப்பினரைவிட எனக்கு அதிகமாக இருக்கிறது. ஆனால் அவ்வாறு எடுப்பதில் பல்வேறு சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

*Amount collected for National Savings Fund.*

* 45 Q.—THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the then Deputy Inspector of Schools, Chingleput district, had collected Funds for the National ~~Schools, Chingleput district, had collected Funds for the National~~ Savings Fund from the teachers in the Valluvar Higher Elementary School of Kuntrathur Town Panchayat, Thiruperumandur taluk, Chingleput district during March 1976;

(c) the action taken on him, if the amount had not been paid into the National Savings Fund ?

தேசிய சேமிப்பு நிதிக்காக வசூலித்த தொகை.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1976ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் செங்கற்பட்டு மாவட்டம் திருபெருமந்தூர் வட்டம், குன்றத்தூர் பேரூராட்சியில் உள்ள வள்ளுவர் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களிடம், அப்போதைய பள்ளித் துணை துணை ஆய்வாளர் தேசிய சேமிப்பு நிதியில் சேர்ப்பிக்க தொகை வசூல் செய்தார் என்பது உண்மையா?

(இ) வசூல் செய்த தொகை எவ்வளவு ?

(உ) அந்தத் தொகை தேசிய சேமிப்பு நிதியில் சேர்ப்பிக்கப் படவில்லை எனில், அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) குன்றத்தூரிலுள்ள வள்ளுவர் நடுநிலைப் பள்ளி மற்றும் மணிமங்கலத்திலுள்ள இந்து தொடக்கப் பள்ளி தாளாளர்கள், குன்றத்தூர் சரகத்தில் அப்போது பணியாற்றிய பள்ளித் துணை ஆய்வாளர் திரு. மீனாட்சி சுந்தரத்திடம் தேசிய சிறு சேமிப்பு பத்திரங்கள் வாங்குவதற்காக 1978 மார்ச்சு திங்களில் முறையே ரூ. 6,900 மற்றும் ரூ. 1,200 கொடுத்ததாக புகார் செய்துள்ளனர்.

(உ) மேற்கூறிய பள்ளித் துணை ஆய்வாளர், தன்னிடம் கொடுக்கப்பட்ட ரூபாய்க்குரிய தேசிய சிறு சேமிப்பு பத்திரங்கள் வாங்கிக் கொடுக்கவில்லை. மேற்கூறிய ஒழுங்கீனத்திற்காக அப் பள்ளித் துணை ஆய்வாளர் 17—2—1977 முற்பகலிலிருந்து தற் காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இச்சமயத்தில் உறுப்பினர் திரு. செ. முத்துசாமி தம் இருக் கையில் இருந்து வினா எழுப்ப முனைந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆசிரியர் தொகுதி என் பதாலேயே ஒரு உறுப்பினரே 4 முறை கேள்வி கேட்பது என்பது சரியல்ல. மற்றவர்களுக்கும் சந்தர்ப்பம் இருக்க வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : விவரங்களைத் தெரிந்து கொள்வதற் குத்தானே நாங்கள் கேள்விகளைக் கேட்க வேண்டியிருக்கிறது. எங்களுக்குச் சந்தர்ப்பமில்லை என்றால், என்ன ஆவது? .....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விவரங்களைக் கேட்பது என்பது கூட கால வரம்புக்கு உட்பட்டதாக அமைய வேண்டும். தயவு செய்து ஒருக்குக் கேள்வி கேட்காதீர்கள். உங்கள் வினாவைக் கேளுங்கள்.

திரு. செ. முத்துசாமி : 'சி' பிரிவு பள்ளிகளைப் பொறுத்த வரையில், 17 பள்ளிகளை அரசு மேற்கொள்வதாக ஏற்கெனவே அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அவைகள் இன்றைக்கும் முழுமையாக அரசுப் பள்ளிகளாகக் கருதப்படாத நிலைதான் இருந்து வருகிறது. எனவே அவைகளை முழுமையாக அரசுப் பள்ளிகளாக ஏற்றுக்கொள்வதுபற்றி எப்போது அரசாங்கம் முடிவு செய்யும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 'பி'- விங் பள்ளிகள் பற்றி ஒரு முடிவு எடுக்கப்பட்டு வருகிறது. அது வெளியான பிறகு இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

*Physical Directors.*

* 46 Q.—THIRU P. R. THOMAS and THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that (i) the services of a large number of Physical Directors appointed after 1970 in Government High Schools, have not been regularised and (ii) they are ousted at the end of every academic year;